# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு
# இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்

# வெற்றிடம்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதிபெற்ற இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:** - **உள்ளக கணக்காய்வாளர்**

**தகைமைகள்** - **(அ) வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. கணக்கியல் / நிதி முகாமைத்துவம் / முகாமைத்துவம் / வர்த்தகத் துறையில் இளமாணிப் பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயத்தில் UGC மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பட்டம்.

   மற்றும்

   முதல் பட்டத்தைப் பெற்ற பின், பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

   மற்றும்

   பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**(ஆ) உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் பதவிக்கு ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு — ரூபா 91,690/-, 10x2,480/-, 15x3,450/- 168,240/- (MM 1-1-2025 தரம் II) (மாதாந்தம்) (நிர்வாகச் சேவைச் சுற்றறிக்கை இல. 01/2025-இன் அட்டவணை II-இன் படி) + அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்.

ஆட்சேர்ப்பு நடைமுறை — நியமன நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவு அடிப்படையில்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

| | |
|---|---|
| தொடர்புடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக கல்வித் தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| ஏனைய அடைவுகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகப்பரீட்சையில் செயல்திறன் | - 25 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

வயது — 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

ஏனையவை — இந்தப் பிரிவுக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளிலும் இந்த ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகள் கண்டிப்பாக பின்பற்றப்படும்.

ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை பெருந்தோட்ட சேமலாப சங்கத்துக்கு உங்களது சம்பளத்தின் குறைந்தது 10% பங்களிப்பும் அந்த சேமலாப நிதியத்திற்கு SLSPC பங்களிப்பு அதிகபட்சம் 12% என்பதோடு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உங்களது சம்பளத்தில் 3% பங்களிப்பு வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் — விண்ணப்பதாரர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்வி சான்றிதழ் மற்றும் அனுபவத்தின் அனைத்து விபரங்கள் மற்றும் பிரதிகளுடன் சேர்த்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரச / கூட்டுத்தாபன / சட்ட ரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள தலைவரின் பரிந்துரையுடன் அவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி — 22.10.2026 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், கீழ் குறிப்பிடப்படடுள்ள முகவரிக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**
**இல. 257,**
**ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு - 10.**